19th September 1961]

SRI K. VINAYAKAM : In implementing the recommendations of the Madras Pay Commission with regard to the servants of the Madras City hospitals, will retrospective effect be given from the date on which those recommendations were applied to other Government servants in our State service?

THE HON. SRI M. A. MANICKAVELU : Effect was given from the date from which effect was given to other categories of Government servants. Here the question is that in respect of a limited number of people, their pay has not been revised according to the recommendations of the Madras Pay Commission because there has been technical difficulty. Such cases are being looked into and they will be given the increased allowance. As I said earlier, we do not have correct information about their basic pay and all that. That is being looked into.

Tractors

* 1615 Q.—SRI V. SUBBIAH ; கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960–61-ல் Hire Purchase System மூலம் ட்ராக்டர்கள் எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட்டன ?

(இ) 1960–61-ல் எத்தனை ட்ராக்டர்கள் வாடகைக்கு விடப்பட்டன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) 19.

(இ) 61.

SRI V. SUBBIAH : இந்த ட்ராக்டர்களை வாடகைக்கு விடுவதில் ஏக்கருக்கு பத்து ரூபாய்க்கு மேல் இருப்பது ஜாஸ்தி என்று விவசாயிகள் நினைப்பதால் அதைக் குறைக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வாடகை நிர்ணயிக்கப் படுவது, லாபமும் கூடாது, நஷ்டமும் கூடாது என்ற முறையில்தான் நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே இந்த வாடகையை மேலும் குறைப்பதற்கு இப்பொழுது சர்க்காருக்கு உத்தேசமில்லை.

SRI K. N. PALANISWAMI GOUNDER : இங்கு ரஷ்யன் ட்ராக்டர்கள் வரவழைக்கப்பட்டு அதற்கு ஸ்பெயர் பார்ட்ஸ் கிடைக்காமல் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறபடியால் ஸிம்ஸன் க்ரூப்பில் செய்யும் ட்ராக்டர்களை, 15 ஹார்ஸ் பவரில் சாதாரண விவசாயிகளுக்கு பயன்படும் முறையில் செய்ய அரசாங்கம் உத்தரவிடுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ரஷ்யன் ட்ராக்டர்களுக்கு ஸ்பெயர் பார்ட்ஸ் இல்லையென்று தெரிவித்தால் அதில் கவனம் செலுத்தி ஸ்பெயர் பார்ட்ஸ் கிடைக்கச் செய்யலாம். இப்பொழுதுதான் ஸிம்ஸன் கம்பெனியார் ட்ராக்டர்கள் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். உடனே அவர்கள் திட்டத்தை மாற்றக்கூடும் என்று நாம் எதிர்பார்ப்பதற் கில்லை.

SRI V. K. KOTHANDARAMAN : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத் தின் குறிக்கோள் விவசாய அபிவிருத்தி. அப்படியிருக்க நமது ராஜ்யத்தில் விவசாயத்திற்கு ட்ராக்டர்கள் இல்லாமல் பெரியளவு பாதிக்கப் படக்கூடிய நிலையிருக்கிறது. ஆகவே குறைந்தபட்சம் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலும் ஒரு ட்ராக்டராவது கண்டிப்பாக வாங்கவேண்டுமென்ற அடிப்படையில் வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கூட்டுறவு ஸ்தாபனங்கள் அவ்வாறு ட்ராக்டர்கள் வைத்துக்கொள்ளவேண்டுமென்று நான் யோசனைக் கூறிக்கொண்டிருக்கிறேன். பஞ்சாயத்து யூனியன்ஸ் அவ்வாறு

[19th September 1961

அதற்கு வேண்டிய நிதி நிலைமையை சமாளித்து சர்க்கார் உதவியையும் பெற்று ட்ராக்டர்கள் வைத்துக்கொள்வார்களானால் அதை வரவேற்பேன், அதற்கு வேண்டிய ஆதரவும் அளிக்கலாம்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : இந்த ட்ராக்டர்களின் ஸ்பெயர் பார்ட்ஸ், குறிப்பாக சேலம் ஜில்லா போன்றயிடங்களில் ரிப்பெயர் ஆகி பல மாதங்களாகியும் சாமான்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் அந்தக் கருவிகள் உபயோகபடுத்தப்படாமல் இருக்கின்றன. ஆகவே, இந்த ட்ராக்டர்களின் ஸ்பெயர் பார்ட்ஸ்களை அதிகமாகத் தயார் செய்து வைத்துக் கொண்டிருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் ஏன் எடுத்திருக்கக்கூடாது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த இயந்திரங்கள், பழைய இயந்திரங்கள். அதிகப்படியான ஸ்பெயர்பார்ட்ஸ் வேண்டியிருக்கிறது. அவைகளை அந்நிய நாடுகளில் இருந்து வரவழைக்கவேண்டியிருந்தது. அதற்கு வேண்டிய அந்நிய நாட்டு செலாவணி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டது. எப்படியும் இப்பொழுது ஸ்பெயர் பார்ட்ஸ் வரவழைக்கப்பட்டிருக்கிறது. அது நமது தேவையை ஓரளவுக்கு பூர்த்தி செய்யும்.

SRIMATHI A. S. PONNAMMAL : அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ட்ராக்டர்கள் வாங்குவதில் பஞ்சாயத்து யூனியன் நிதிநிலை அனுசரித்தும், அரசாங்கமும் சில சலுகைகள் கொடுக்குமென்று சொன்னார்கள். அப்படியானால் பஞ்சாயத்து யூனியன் எவ்வளவு பணம் போடவேண்டும், அரசாங்கம் எவ்வளவு பணம் கொடுக்கும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த உபகேள்விக்கு பதில் அளிக்கும் வகையில் இப்பொழுது அந்தத் திட்டத்தை உருவாக்க முடியாது. பஞ்சாயத்து யூனியன்ஸ் இதில் அக்கரை எடுத்து ஈடுபட்டால் அரசாங்கமும் அதைக் கவனித்து ஒரு திட்டத்தை உருவாக்கலாமா என்று யோசிக்கலாம்.

SRI M. KALYANASUNDARAM : ஸிம்ஸன் கம்பெனியார் ட்ராக்டர்கள் தயாரிப்பதற்காக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதன் விவரங்கள் என்ன ? விலை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுபற்றி இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை. தனி கேள்வி கேட்டால் தெரிவிக்கலாம்.

SRI R. SRINIVASA IYER : 61 ட்ராக்டர்கள் வெளியில் வாடகைக்கு விடப்பட்டதாகச் சொல்லப்பட்டது. 61 ட்ராக்டர்களும் சர்க்கார் வசமுள்ளதா ? அப்படியானால் அதில் எவ்வளவு உபயோகத்தில் இருக்கின்றன ? எவ்வளவு நீண்ட காலமாக ரிப்பெயரில் இருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அடியோடு உபயோகமின்றி இருப்பதும் உண்டு. உபயோகப்படுவது 61. அவை வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. அதோடு நமது அரசாங்க இலாகாக்களுக்கும் இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. கால்நடை இலாகாவிற்கு, கால்நடைப் பண்ணை வேலை செய்ய இரண்டு ட்ராக்டர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சர்க்கார் இலாகாக்களுக்கும் இவை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

SRI K. B. S. MANI : இம்மாதிரி சர்க்கார் வாடகைக்கு கொடுப்பதின் மூலம் சிறு நிலச்சுவாந்தார்கள், விவசாயிகள் நல்ல, முறையில் இவைகளைப் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. ஆகவே இம்மாதிரி வாடகைக்கு விடக்கூடிய ட்ராக்டர்களை இன்னும் அதிகப்படுத்தி ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒவ்வொன்றுவது] சர்க்கார் வாடகைக்கு விடும் முறையில் ட்ராக்டர்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது 21 ட்ராக்டர்கள் அமெரிக்காவிலிருந்தும், ரஷ்யாவிலிருந்தும் வரவழைப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சீக்கிரத்தில் அதை எதிர்பார்க்கலாம்.

19th September 1961]

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : ஜப்பானிலிருந்து சிறிய அளவு குதிரை வேகத்தில் அதாவது ஐந்து குதிரை வேக ஓட்டத்தில் டிராக்டர்கள் செய்வதாகவும் இதை நாம் வாங்க விரும்புவதாகவும் வதந்திகள் இருக்கின்றனவே அது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி இப்போது என்னிடம் தகவல் இல்லை. 9 a.m.

Immoral Traffic

* 1616 *Q.*—SRI A. A. RASHEED (on behalf of SRI N. R. THIAGARAJAN) : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை ராஜ்யத்தில் விபசாரிகள் நாளுக்குநாள் அதிகமாக பெருகி இளைஞர்களின் தேக ஆரோக்கியத்திற்கும், ஆஸ்திக்கும் தீங்காக இருக்கும் நிலையைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Suppression of Immoral Traffic in Women and Girls Act, 1956 (Central Act 104 of 1956) which supersedes the Madras Suppression of Immoral Traffic Act, 1930 contains adequate provisions to deal with the evil of prostitution.

SRI A. A. RASHEED : Sir, is it a fact that courting and wooing couples have been prosecuted under the Suppression of Immoral Traffic Act?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the hon. Member seems to have been observing so many things which normally we do not observe. In respect of whatever cases come under the provisions of this Act, action is being taken.

Loan for Agriculturists

* 1617 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Home be pleased to state the amount given to agriculturists either as loan or subsidy—

(i) to sink wells;

(ii) to purchase bulls; and

(iii) to purchase manures in Tiruttani taluk, Chingleput district soon after its merger in our State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The following amounts were disbursed as loan or subsidy to the agriculturists of Tiruttani taluk during the period from 1st April 1960 to 31st March 1961 :—

	RS.
(i) for sinking wells	21,500
(ii) for purchase of bulls	59,950
(iii) for purchase of manures	Nil.